TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093641

1. District / மாவட்டம்: நாமக்கல் PS / காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year / ஆண்டு: 2020 FIR No. / மு.த.அ. எண்: 01/AC/2020 Date / நாள்: 13.03.2020

2. (i) Act சட்டம்: The P.C. Act, 1988 as Sections பிரிவுகள்: 7(a) and 7A
(ii) Act சட்டம்: amended by the prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.03.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period நேர அளவு: இரவு 21.15 மணிக்கு முன்பு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.03.2020 Time நேரம் : மாலை 17.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 13.03.2020 Time நேரம் : மாலை 17.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப் பெற்ற தகவலின் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.தி. ஜெயக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர்
(g) Address முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.வெ. தமிழ்செல்வன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு மற்றும் 5 நபர்கள் [விபரம் தனித்தாளில் இணைக்கப் பட்டுள்ளது]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிடப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91-ன் மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிடப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது :-

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13.03.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13.03.2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.03.2020 இரவு 19.30 மணிக்கு

Name: பெயர் A.T. ஜெய்குமார்
Rank: நிலை .................... No. எண் ..........
காவல் நிலைய கண்காணிப்பாளர், ஊ.கு.க. பிரிவு, நாமக்கல்

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2020, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் வரிசை எண் 7 இன் தொடர்ச்சி.,**

எதிரிகளின் பட்டியல்

1) திரு.வே.தமிழ்செல்வன், (வயது-57), த.பெ.வேலுச்சாமி, சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2) திரு.S.பழனியப்பன், (வயது-50), த.பெ.சுப்பிரமணியம், கதவு எண்.304/3-7, கொட்டக்காடு, சாணார்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (தனியர்/புரோக்கர்).

3) திரு.S.வெங்கடேசன், (வயது-53), த.பெ.சுப்பிரமணியம், கதவு எண்.9/1 SMD ரோடு, கிராஸ்-3, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (பத்திர எழுத்தர்).

4) திரு.M.ராஜகோபால், (வயது-24), த.பெ(லேட்) முருகேசன், கதவு எண்.3/5A1, AKE தெரு, எண்-9, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (தனியர்/புரோக்கர்)

5) திரு.S.சுரேந்திரகுமார், (வயது-55), த/பெ.சுப்பிரமணியம், கதவு எண்.215, கோம்பை நகர், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (தனியர்/புரோக்கர்).

6) திரு.M.சேகர் @ சந்திரசேகரன், (வயது-42), த.பெ.முத்துசாமி, கதவு எண்.2/280-A, வெற்றிநகர், ஆண்டிபாளையம், அனிமூர் அஞ்சல், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (தனியர்/புரோக்கர்).

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.**01/AC/2020. u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 12.03.2020-ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 21.15 மணி முதல் 13.03.2020-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 09.00 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 13.03.2020-ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2020, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில், திருச்செங்கோடு சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரபதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் 12.03.2020-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திடீர் தணிக்கை மேற்கொள்ள, அரசு சாட்சிகளாக விசாரணைக்கு உதவியாக இருக்க அவர்களின் உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, மேற்படி அரசு சாட்சிகள் இருவரையும் திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம் முன் காத்திருக்குமாறு தொலைபேசியில் அறிவுறுத்திய பின்னர் 12.03.2020-ம் தேதி இரவு சுமார் 19.30 மணிக்கு நான், காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு திருச்செங்கோடு, வட்டாட்சியர் அலுவலகம் முன்பு இரவு சுமார் 20.30 மணிக்கு வரப்பட்டது. அங்கு காத்திருந்த மேற்படி அரசு சாட்சிகளை நான் அரசு வாகனத்தில் அழைத்துக் கொண்டு திருச்செங்கோடு சார்பதிவாளர்

அலுவலகத்திற்கு இரவு சுமார் 21.15 மணிக்கு வரப்பட்டது. திருச்செங்கோடு To சங்ககிரி செல்லும் தென்வடல் சாலையில் மேற்குபுறம் திருச்செங்கோடு பழைய பேருந்துநிலையம் அருகில் உள்ள காந்தி சிலைக்கு எதிர்புறம் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்தபோது வாசலில் நின்றிருந்த நபரை விசாரிக்க, அவர் சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் அவர்களுக்கு வழக்கமாக கார் வாடகைக்கு ஒட்டும் டிரைவர் என்றும், அவர் திரு.S.பழனியப்பன், வயது-50, த.பெ.சுப்பிரமணியம், 304/3-7, கொட்டக்காடு, சாணார்பாளையம், திருச்செங்கோடு என்றும், அவர் சார்பதிவாளர் களஆய்வுக்கு செல்லும்போது அவரது காரில் சார்பதிவாளரை அழைத்து செல்வார் என்பதும் தெரியவந்தது. அவரை உள்ளே அழைத்து வந்து பார்வையாளர்கள் இருக்கையில் அமரவைத்தேன். பின்னர் ஹாலில் கிழக்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான் என்னையும், என்னுடன் வந்திருந்த அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன். பின்பு நான் அவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.வே.தமிழ்செல்வன் என்றும், சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நான் குழுவினருடன் சார்பதிவாளரிடம் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன்பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அப்போது திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.R.மாலதி, உதவியாளர் திரு.V.சசிகுமார், அலுவலக உதவியாளர் திரு.M.காளியப்பன், தகவல் தொகுப்பு பணியாளர் திரு.P.தியாகு ஆகிய அலுவலர்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். அனைத்து அலுவலர்களையும் சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் ஹாலுக்கு வருமாறு நான் கேட்டுக் கொண்டேன். பின்னர் நான், அரசு சாட்சிகள் உதவியுடன் சார்பதிவாளரின் இருக்கை முழுவதையும் சோதனை செய்தேன். அப்போது சார்பதிவாளரிடம் அன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை விபரங்கள் குறித்துக் கேட்டேன். அதற்கு அவர் இன்றைய தினம் இரவு 20.50 மணிவரை மொத்தம் 55 ஆவணங்கள் எண்கள் 1/1643/2020

முதல் 1/1697/2020 வரை பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்காக A-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.20,50,562/-ம், Point of Service (POS) தொகையாக ரூ.233/-ம் வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும் D-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.7,726/- வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேற்படி தொகைகளுக்கு உண்டான அன்றைய தினம் போடப்பட்ட இரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தன. மேலும் நிரந்தர முன்பணம் பையை சோதனை செய்து பார்க்கையில் ரூ.250/- இருந்தது. அதை தொகுதி எண்-6 நிலையான முன்பணம் பதிவேட்டு பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க ரூ.250/- சரியாக இருந்தது. மேற்படி பணம் சார்பதிவாளரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. நான் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்து கொண்டிருந்தபோது இரவு சுமார் 21.45 மணிக்கு மூன்று நபர்கள் அலுவலக வளாகத்திற்குள் வந்தார்கள். நான் அவர்களிடம் விசாரிக்க அவர்கள் 1) திரு.S.சுரேந்திரகுமார், வயது-55, த/பெ.சுப்பிரமணியம், 215, கோம்பை நகர், திருச்செங்கோடு, 2) திரு.S.வெங்கடேசன், வயது-53, த.பெ.சுப்பிரமணியம், 9/1 SMD ரோடு, கிராஸ்-

3. திருச்செங்கோடு. 3) திரு.M.ராஜகோபால், த.பெ(லேட்).முருகேசன், க.எண்.3/5A1, AKE தெரு, எண்-9, திருச்செங்கோடு என்பதும் தெரியவந்தது. அவர்களை மேலும் விசாரிக்க தாங்கள் பத்திரபதிவு சம்பந்தமாக சார்பதிவாளர் தமிழ்செல்வன் அவர்களை சந்திக்க வந்துள்ளதாக தெரிவித்தனர். அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் அழைத்து வந்து பார்வையாளர்களுக்கான இருக்கையில் அமர வைக்கப்பட்டனர். பின்னர் இரவு சுமார் 21.50 மணிக்கு சார்பதிவாளர் அலுவலக வளாகத்திற்குள் கையில் ஒரு நோட்டுடன் வந்த நபரை காவலர்கள் அலுவலகத்திற்குள் அழைத்து வந்தார்கள். நான் அவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.சேகர் @ சந்திரசேகரன் என்றும், திரு.முரளி என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் அவருடன் சேர்ந்து தொழில் செய்து வருவதாகவும், சார்பதிவாளர் அவர்களை சந்திக்க வந்ததாகவும் கூறினார். நான் அவரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு மீண்டும் அவரை விசாரிக்க, பத்திர எழுத்தர் திரு.முரளி அவர்கள் டாக்குமெண்ட் பதிவு செய்வதற்கான பணத்தை சார்பதிவாளரை சந்தித்து அவரது அலுவலகத்திற்கு கொண்டு வந்து

கொடுக்கவா, இல்லை அலுவலகத்திற்கு வெளியில் அவர் சொல்லும் இடத்தில் கொண்டு வந்து கொடுக்கவா என கேட்டு வரும்படி அனுப்பி வைத்ததாக கூறினார். அவரிடம் நான் எவ்வளவு பணம் சார்பதிவாளருக்கு கொடுக்க சொல்லியுள்ளார், அந்த பணம் எங்கு உள்ளது என்று கேட்க, அதற்கு அவர் பத்திர எழுத்தர் முரளி அலுவலகத்தில் உள்ளது என்று சொன்னார். அதை எடுத்து வரும்படி சொல்லி நான் அவரை அனுப்பி வைத்தேன். சிறிது நேரத்தில் திரு.சேகர் @ சந்திரசேகரன் திரும்ப சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் கையில் நோட்டு மற்றும் கருப்புநிற ரெக்சின் பேக்குடன் வந்தவரை பார்வையாளர்கள் அறையில் காத்திருக்குமாறு நான் கேட்டுக் கொண்டேன்.

பின்னர் நான் திடீர் தணிக்கையின் தொடர்ச்சியாக சார்பதிவாளர் அலுவலகத்தின் கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிட்டேன்.

- "A" கணக்கு பார்வையிட்டதில், அன்றைய தினம் 12.03.2020-ம்தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள்.1643 முதல் 1697 வரை பதிவுகள் உள்ளது. அதற்கான பக்கங்கள் அச்சு நகல் எடுக்கப்பட்டு திருச்செங்கோடு சார்பதிவாளர் அவர்களிடம் கையொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது (5 தாள்கள்).
- "B" கணக்கு கணினியில் பார்வையிட்டதில் அன்று 12.03.2020-ம் தேதி ஆவண பாதுகாப்பு கட்டணம் ரூ.10/- இணையதளத்தின் மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பக்கத்திற்கான அச்சு நகல் எடுக்கப்பட்டு திருச்செங்கோடு சார்பதிவாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது (1 தாள்).
- "C" கணக்கு பதிவேடு பக்கம் எண்-33-ல் அன்று 12.03.2020-ம் தேதி முன் இருப்பு ரூ.30,000/- இருப்பதாக பதிவுகள் உள்ளது. மேலும் அந்த பணத்திற்கு 12.03.2020-ம் தேதியில் ஸ்டேட் பேங் ஆப் இந்தியாவில் Armed Force Flag day fund-றகாக ரூ.30,000/- DD எடுக்கப்பட்டுள்ளது. அந்த SBI DD-யின் ஒளி அச்சு நகல் எடுக்கப்பட்டு திருச்செங்கோடு சார்பதிவாளர் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. (4 தாள்கள்)
- "D" கணக்கு கணினியில் பார்வையிடப்பட்டதில், அன்று 12.03.2020-ம் தேதி கடைசியாக பொதுத்தேடுதல் எண்.ECA/37920529/2020-ல் வில்லங்க சான்றுக்காக ரூ.361/- பெற்றமைக்கு கடைசி பதிவுகள் உள்ளது. அந்தப்

பக்கத்திற்கான அச்சு நகல் எடுக்கப்பட்டு திருச்செங்கோடு சார்பதிவாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது (4 தாள்கள்).

- "G" பதிவேடு தொகுதி எண்.63 பார்வையிடப்பட்டது. அதில் கடைசியாக 12.02.2020-ம் தேதி வரை அனுமதிக்கப்பட்ட பதிவுகளுக்கான ஆவணங்கள் 38 எண்ணிக்கைகள் உள்ளன. அது குறித்து சார்பதிவாளர் அவர்களை கேட்க அதற்கு அடுத்த விபரங்கள் பதிவு செய்ய வேண்டியுள்ளது என்றும் கணினியில் பதிவேடுகள் பராமரிக்கப்படுவதால் இக்கணக்கு தினந்தோறும் பராமரிக்கப்படுவதில்லை என்றும் சொன்னார். அதற்கான கணினி பதிவேடு பார்வையிடப்பட்டதில் "G" பதிவேட்டின் தொகுப்பு உள்ளது. அதில் 12.03.2020 அன்று 55 ஆவணங்கள் அன்று பதிவு செய்யப்பட்டது என்றும், 22 ஆவணங்களின் நிலுவை என்ற விபரங்களும் உள்ளன. அதன் ஒளிநகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது (3 தாள்கள்).
- "H" கணக்கு கணினியில் பார்வையிட்டதில் அன்று 12.03.2020-ஆம் தேதி "A" கணக்கில் ரூ.20,24,534/-ம், "B" கணக்கில் ரூ.10/-, "D" கணக்கில் ரூ.9,886/-, "CD" கணக்கில் ரூ.5,500/-, உட்பிரிவு கணக்கு ரூ.2,790/-, இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு-41 மற்றும் 42-ன் கீழ் வசூல் ரூ.26,261/- சங்கங்கள் பதிவு கட்டணம் என்ற தலைப்பில் ரூ.10,200/-, B & D Extract கணக்கில் ரூ.900/- வசூல் செய்யப்பட்டுள்ளதாக பதிவுகள் உள்ளன. A-கணக்கு, D-கணக்கு சங்கங்கள் பதிவு கட்டண கணக்குகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து சார்பதிவாளரிடம் கேட்க, தற்போது கணினி trial and error method பயன்படுத்தப்பட்டு வருவதால் முரண்பாடு உள்ளதாக கூறினார். (1 தாள்)
- நிலையான முன்பணம் பட்டுவாடா பதிவேடு தொகுதி எண்-6 பார்வையிடப்பட்டது. 12.03.2020-ஆம் தேதியில் நிரந்தர முன்பணம் ரூ.250/- சரியாக உள்ளது. (3 தாள்கள்)
- இந்து திருமண கட்டணப் பதிவேடு கணினியில் பார்வையிடப்பட்டது. 12.03.2020-ஆம் தேதி இந்து திருமணம் பதிவு எதுவும் செய்யப்படவில்லை. (3 தாள்கள்)

- பணியாளர் ரொக்க இருப்பு பதிவேடு தொகுதி எண்.12 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-18-ல் 12.03.2020-ம் தேதி கடைசி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (3 தாள்கள்)
- திருச்செங்கோடு சார்பதிவகம் வருகைப் பதிவேடு-2020 தொகுதி எண்.129 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-10 முதல் 12 வரை உள்ள 2020- மார்ச் மாதத்திய வருகை பதிவேட்டில் சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் மற்றும் இதர அலுவலர்கள் இன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர். (3 தாள்கள்)
- தன்பதிவேடு தொகுதி எண்.119 பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் கடைசியாக பக்கம்-22-ல் வரிசை எண்.70-ல் நடப்பு எண்.94 என்று குறிப்பிட்டு, இறுதியாக 04.03.2020-ஆம் தேதி பதிவுகள் உள்ளது. (2 தாள்கள்)
- TCS பணியாளர் வருகைப் பதிவேடு-2020, தொகுதி எண்.128 பார்வையிடப்பட்டது. அதில் 2020-மார்ச் மாதத்திய வருகை பதிவேட்டில் திருமதி.J.ராணி, திரு.P.தியாகு, திருமதி.R.சுபாஷினி ஆகியோர் அன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர்.

மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் (கணினி பதிவேடு தவிர) நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அதன் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் திரு.தமிழ்ச்செல்வன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் சார்பதிவாளரிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), நாமக்கல் அவர்களின் உத்தரவுப்படி 2020-ஆண்டு கொடிநாள் நிதி வசூல் ரூ.70,000/- இலக்கு நிர்ணயித்து, அதன்படி கடந்த 26.02.2020 வரை ரூ.20,000/-ம் வசூலிக்கப்பட்டு, அதற்கான Armed force flag day fund வரைவோலை எடுக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டும், அதன்பின் 11.03.2020-ஆம் தேதி வரை ரூ.30,000/-ம் வசூலிக்கப்பட்டு, அதற்கான SBI வங்கி வரைவோலை எடுக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த

இரசீது அடிக்கட்டைகள் எண்.1047001 முதல் 1047100 மற்றும் 1050401 முதல் 1050800 வரை உள்ளது என்றும், அன்று 12.03.2020-ம் தேதி ரூ.2600/- வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் இரசீதுகள் 1050801 முதல் 1050826 வரை 26 உள்ளது என்றும், அந்த தொகை ரூ.2,600/- கையிருப்பு சரியாக உள்ளது என்றும், இன்னும் ரூ.17,400/- கொடிநாள் நிதி வசூல் இலக்கு நிலுவையில் உள்ளது என்றும், அதன் இரசீதுகள் 1050827 முதல் 1051000 வரை உள்ளது என்றும் தெரிவித்தார். மேற்படி ரூ.20,000/-மற்றும் ரூ.30,000/- ஆகியவற்றிற்கான வங்கி வரைவோலை ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் நடவடிக்கைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர், திருச்செங்கோடு சார்பதிவாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் அவர்களை சோதனையிட்டதில், அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.1,250/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை அலுவலர்களின் பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்து அதை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் நான், சார்பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகளை உடன் அழைத்துக் கொண்டு தெற்கு பக்கம் உள்ள சார்பதிவாளர் அன்றாட ஆவண பாதுகாப்பு அறை சென்று அறை முழுவதும் சந்தேகத்தின் பேரில் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலகத்தின் வடக்கு பக்கம் உள்ள உதவியாளர் திருமதி.மாலதி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரது கைப்பை சோதனையிடப்பட்டது அதில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில், இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.500/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில்

பதிவு செய்து ஒரு கவரில் போட்டு சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் நான், சார்பதிவாளர் மற்றும் சாட்சிகளை அழைத்துக் கொண்டு கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கணினி அறைக்கு சென்று அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.V.சசிகுமார் என்பவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில், இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.470/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திரு.P.தியாகு என்பவரை சோதனையிட்டதில், அவரது சட்டையிலிருந்து ரூ.200/- எடுத்து ஆஜர் செய்தார். அது தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்றும், அதை பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார். அதை பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டுடன் சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.200/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்திலிருந்த திரு.M.காளியப்பன் என்பவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில், இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.100/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளார் ரொக்க இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் நான், சார்பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகளை அழைத்துக் கொண்டு பார்வையாளர்கள் அறையில் அமரவைக்கப்பட்டிருந்த திரு.பழனியப்பன் அவர்களை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது பேண்ட்டின் வலதுபுற முன்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் 500X26 ஆக மொத்தம் ரூ.13,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.13,000/-ஐ தொடர்

விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் நான் பார்வையாளர்கள் அறையில் அமர்ந்திருந்த திரு.வெங்கடேசன் என்பவரை விசாரிக்க, அவர் பதிவு செய்யப்பட்ட பத்திர எழுத்தர் என்றும், அவருடைய பதிவு எண்-A521/NMK/91 என்றும், பத்திரங்கள் பதிவு செய்தது சம்பந்தமாக சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் அவர்களை சந்திக்க வந்திருப்பதாக கூறினார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனை செய்ததில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் இருந்து இரண்டு கத்தையாக இருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு கத்தையில் 2000x3, 500X19, 100x5, மொத்தம் ரூ.16,000/- இருந்தது. மற்றொரு கத்தையில் 500x1, 100x3 மொத்தம் ரூ.800/- இருந்தது. ஆகமொத்தம் ரூ.16,800/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, இன்று அவர் தன்னுடன் வந்திருக்கும் சுரேந்திரகுமார், ராஜகோபால் ஆகியோருடன் சேர்ந்து 14 ஆவணங்கள் பதிவு செய்துள்ளதாகவும், அது சம்பந்தமாக சார்பதிவாளரை பார்க்க வந்திருப்பதாக தெரிவித்தார். சுரேந்திரகுமார் மற்றும் ராஜகோபால் ஆகியோர் ஆவண எழுத்தராக பதிவு பெறவில்லை என்பதால் தனித்தனியாக பத்திரங்கள் தயார் செய்து அவர்கள் தயார் செய்யும் பத்திரங்களில் தான் ஆவண எழுத்தர் என்ற இடத்தில் கையெழுத்து செய்து பதிவிற்கு அனுப்புவதாகவும், தன்னிடம் உள்ள பணம் ரூ.800/- தனது செலவிற்காக வைத்துள்ளதாகவும், மீதி பணம் ரூ.16,000/- இன்றைய தேதியில் அவர் செய்த பத்திரபதிவு சம்பந்தமாக கொண்டு வந்தாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததால் அந்த பணம் ரூ.16,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்ததாகச் சொன்ன பணம் ரூ.800/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.ராஜகோபால் என்பவரை சோதனை செய்ததில் அவருடைய வலது பக்க முன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த கருப்பு நிற மணிபர்சில் இருந்து மடிப்புடன் கூடிய பணத்தையும், அத்துடன் மடித்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சிறிய வெள்ளை நிற துண்டு சீட்டுகளையும் எடுத்து ஆஜர் செய்தார். அதில் Rs.2000x3, 500X18, 200x7 பணம் ஆக மொத்தம் ரூ.16,400/- இருந்தது. அது குறித்து நான் அவரிடம் கேட்க, திரு.ராஜகோபால் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் அந்த பணம் ரூ.16,400/-

விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அந்த துண்டு சீட்டுகளை பார்வையிட்டதில், ஒரு சீட்டில் சிகப்பு மையினால் 1 முதல் 12 பெயர்களும், மற்றொரு சீட்டில் 13 முதல் 19 பெயர்களும் இருந்தது. அந்த பெயர்களுக்கு நேராக கிரயம், கரார், தடம் ஆகிய விபரங்களும் அதற்கடுத்து தேதியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இரண்டு துண்டு சீட்டுகளையும் நான் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.100/- எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி விசாரிக்க, அந்த பணம் தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் இருந்ததால் அப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.சுரேந்திரகுமார் என்பவரை சோதனையிட்டதில், அவருடைய சட்டையின் இடது புற மேல் வெளிப்பக்கெட்டில் இருந்து பல்வேறு மடிப்புடன் கூடிய பணத்தையும் அத்துடன் மடித்து வைக்கப்பட்டிருந்த இந்தியன் வங்கி டெபாசிட் சீட்டு ஐந்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அதில் பணம் Rs.2000x3, 500X17, 100x2, மொத்தம் ரூ.14,700/- இருந்தது. அது குறித்து திரு.சுரேந்திரகுமார் என்பவரிடம் விசாரிக்க, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் அந்த பணம் ரூ.14,700/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். இந்தியன் பேங்கின் டெபாசிட் ரசீதுகளை பார்வையிட்டதில் இந்தியன் வங்கி கணக்கு எண்.0065650035-ல் 12.03.2020-ஆம் தேதி ரூ.59,500/-, ரூ.2,000/-, ரூ.6,000/-, ரூ.28,000/- மற்றும் ரூ.5,000/- செலுத்தியதற்கான டெபாசிட் ரசீதுகள் Record No.8053, 8055, 8065, 8067, 8069 இருந்தன. அந்த டெபாசிட் ரசீதுகள் அழிந்துபோகும் மையினால் இருந்ததால் அவற்றின் ஒளிநகல் எடுக்கப்பட்டு நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து அதை விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும், அவரது கையில் வைத்திருந்த ஸ்ரீவளர் டெக்ஸ்டைல் என்று எழுதப்பட்டுள்ள மஞ்சள் நிற கைப்பையை சோதனையிட்டதில், அந்த பையில் இரண்டு காக்கி நிற கவர்கள் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன. அதில் ஒரு காக்கி நிற கவரில் கருப்பு நிற பேனாவால் கவரின் வெளிப்புறத்தில் 800+200=1,000 என்று எழுதப்பட்டிருந்தது. அந்த காக்கிநிற கவரினை சோதனையிட்டதில் Rs.500X1, 200X2, 100X1 மொத்தம் ரூ.1,000/- இருந்தது.

மேலும் அந்த பையில் உள்ள மற்றொரு காக்கிநிற கவரை சோதனையிட்டதில், அந்த காக்கிநிற கவரின் வெளிப்புறத்தில் சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு என அலுவலக சீல் வைக்கப்பட்டிருந்தது. அந்த காக்கிநிற கவரினை சோதனையிட்டதில் அதில் Rs.500X2, 200X8, 100X2 மொத்தம் ரூ.2,800/- இருந்தது. மேற்படி காக்கிநிற காக்கி கவர்களில் இருந்த பணம் குறித்து திரு.சுரேந்திரகுமார் என்பவரிடம் விசாரிக்க, அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததால் அந்தபணம் ரூ.1,000/- மற்றும் ரூ.2,800/-ஐ மேற்படி காக்கிநிற கவர்களுடன் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது பையில் வைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டதில் சார்பதிவாளர் அவர்களுடன் ஆவண உரிமையாளர்கள் எடுத்து கொண்ட 4 புகைப்படங்கள் ஒரு காக்கிநிற கவரில் இருந்தன. அதில் உள்ள புகைப்படங்கள் பற்றி கேட்ட போது, அதில் உள்ள ஆவணதாரர்களின் பெயர்கள் தற்போது ஞாபகம் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அந்த பையில் இருந்த பதிவு துறை ரசீது ஆவணப்பதிவு ரசீது எண்கள் முறையே 1483/2020, 2804/2020 அவற்றின் ஆவண எண்கள் முறையே 892/2020, 1497/2020 என இருந்தன. அவைகள் மேற்படி ஆவணங்களை பதிவு செய்தது மற்றும் களப்பணி செய்ய வேண்டியது சம்பந்தமான ரசீதுகள் ஆகும். அந்த ரசீதுகள் மற்றும் மேற்படி ஆவணங்கள் இருந்த பை ஆகியவற்றை நான் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் திரு.சுரேந்திரகுமார் அவரது சட்டையின் மேல் உள்பாக்கெட்டில் இருந்து ரூ.720/-ஐ தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்திருப்பதாக சொல்லி எடுத்து ஆஜர் செய்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் இருந்ததால் அப்பணம் அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது.

பின்னர் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திரு.சேகர் @ சந்திரசேகரன் என்பவர் கொண்டு வந்திருந்த நோட்டையும், கருப்பு நிற ரெக்சின் பேக்கையும் ஆஜர் செய்தார். அந்த நோட்டின் அட்டையில் மஞ்சள் நிற நீள்வட்டத்தில் SUPER STYLE என சிகப்பு கலரில் எழுதப்பட்டுள்ளது. அந்த ஒரு குயர் நோட்டின் முன்பக்கம் முருகன் படம் அச்சடிக்கப்பட்டுள்ளது. அந்த நோட்டின் உட்பகுதியில் தேதி, எழுதி கொடுப்பவர், எழுதி வாங்குபவர், தன்மை, ஆவண

எண் மற்றும் குறிப்பு என கலங்கள் பிரிக்கப்பட்டு கருப்பு நிற எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. அந்த நோட்டை விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அந்த கருப்புநிற ரெக்சின் பேக் சோதனை செய்யப்பட்டது. அதன் வெளிபுறத்தில் apple ™ என்ற சில்வர் லோகோ உள்ளது. மேலும் அந்த கருப்புநிற ரெக்சின் பேக்கின் உட்பகுதியில் நான்கு அறைகள் உள்ளது. அதில் உட்பகுதியில் இருந்து இரண்டாவது அறையில் பத்து கட்டுகள் பணம் இருந்தது. அதன் விபரம் பின்வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 200 | x | 50 | = Rs.10,000/- |
| 2. | 100 | x | 53 | = Rs.5,300/- |
| 3. | 200 | x | 37 | = Rs.7,400/- |
| 4. | 2000 | x | 30 | = Rs.60,000/- |
| 5. | 2000 | x | 35 | = Rs.70,000/- |
| 6. | 100 | x | 70 | = Rs.7000/- |
| 7. | 500 | x | 32 | = Rs.16,000/- |
| | 2000 | x | 12 | = Rs.24,000/- |
| 8. | 500 | x | 115 | = Rs.57,500/- |
| | 2000 | x | 8 | = Rs.16,000/- |
| 9. | 50 | x | 70 | = Rs.3,500/- |
| 10. | 50 | x | 2 | = Rs.100/- |
| | 200 | x | 1 | = Rs.200/- |
| | 100 | x | 45 | = Rs.4,500/- |

ஆக மொத்தம் ரூ.2,81,500/- இருந்தது. மேலும் அந்த ரெக்சின் பேக்கின் உட்பகுதியில் இருந்து மூன்றாவது அறையில் எட்டு கட்டுகள் பணம் இருந்தது. அதன் விபரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 200 | x | 30 | = Rs.6,000/- |
| | 50 | x | 7 | = Rs.350/- |
| | 100 | x | 29 | = Rs.2,900/- |
| 2 | 500 | x | 25 | = Rs.12,500/- |
| 3 | 500 | x | 73 | = Rs.36,500/- |
| 4 | 200 | x | 85 | = Rs.17,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 2000 | x | 11 | = Rs 22,000/- |
| 6 | 500 | x | 14 | = Rs 7,000/- |
| 7 | 500 | x | 9 | = Rs 4,500/- |
| 8 | 100 | x | 1 | = Rs 100/- |

என ஆக மொத்தம் ரூ.1,08,850/- இருந்தது. பின்னர் நான், அவரிடம் வேறு ஏதேனும் பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்டு சோதனை செய்ததில், அவரது பேண்டின் வலது முன் பக்க பாக்கட்டில் இருந்து பிரவுன் கலர் பர்சை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பர்சில் இரண்டு அறைகள் உள்ளன, முதல் அறையில் Rs 2000 x 4, 500 x 27, 200 x 11, 100 x 19 ஆக மொத்தம் ரூ.25,600/- இருந்தது. மேற்படி பணம், பிரவுன் கலர் மணிபர்ஸ் மற்றும் கருப்பு நிற ரெக்சின் பேக் ஆகியவற்றை விசாரணையின் நிமித்தம் நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் பார்வையாளர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. பின்னர் நான், சார்பதிவாளர் மற்றும் சாட்சிகளுடன் அலுவலகத்தின் முதல் தளத்திற்கு செல்லப்பட்டது. முதல் தளத்தில் வடக்கு பார்த்துள்ள ஆவண பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகமானது திருச்செங்கோடு To சங்ககிரி செல்லும் சாலையில் பழைய பஸ்நிலையம் அருகில் உள்ள அண்ணாசிலை பின்புறம் ரோட்டின் மேற்கு பகுதியில் கிழக்கு பார்த்தவாறு முதல் தளத்துடன் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அலுவலகத்தின் நுழைந்தவுடன் பொதுமக்கள் அமருவதற்கு 21 x 10 அடி அளவில் வரவேற்பு அறை உள்ளது. அதில் வடக்கு பார்த்தவாறு இருக்கைகள் போடப்பட்டுள்ளன. அந்த அறையின் மேற்கே அலுவலக பிரதான ஹாலில் நுழைந்தவுடன் சுமார் 12 அடி தூரம் மேற்கே கிழக்கு பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கை உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு 3 அடி தெற்கே, கிழக்கு பார்த்தவாறு உதவியாளர் இருக்கை ஒன்றும் அதன் தெற்கே சுமார் 4 அடி தொலைவில் வடக்கு பார்த்தவாறு உதவியாளர் இருக்கை ஒன்றும், அதிலிருந்து சுமார் 5 அடி தெற்கே வடக்கு பார்த்தவாறு சார்பதிவாளரின் தினசரி ஆவண காப்பு அறை உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு வடக்கில் முதல்

தளத்திற்கு செல்லும் படிக்கட்டும், அதன் கிழக்கு பகுதியில் உதவியாளர் இருக்கையும், அதன் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் கண்ணாடி தடுப்புகளால் ஆன கணினி அறை அமைந்துள்ளது. மேற்படி திடீர் தணிக்கை 13.03.2020-ம் தேதி காலை 09.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். மேலும் அலுவலக உடைமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது திரு.M.ராஜகோபால், திரு.S.பழனியப்பன், திரு.S.வெங்கடேசன், திரு.S.சுரேந்திரகுமார் மற்றும் திரு.M.சேகர் @ சந்திரசேகரன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் அரசு சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் என்னால் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பத்திர எழுத்தர்/தனியர்/இடைத்தரகர் ஆகியோர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் இடைத்தரகர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்படக்கூடிய பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், பத்திர எழுத்தர்/ தனியர்/இடைத்தரகர் முறையற்ற விதத்தில் சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் அவர்களது அலுவல் பணியில் பத்திர எழுத்தர்/தனியர்/ இடைத்தரகருக்கு பிரதிபலனாகவோ, சட்ட விரோதமான வழிகளிலோ பணி செய்வதற்கு அவர்களைத் தூண்டுவதற்கு அலுவலகத்திற்கு கையூட்டு பணத்துடன் வந்து இருக்கக்கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,

சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, மேற்படி எதிரிகள் 1) திரு.வே.தமிழ்செல்வன், த.பெ.வேலுச்சாமி, சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், 2) திரு.S.பழனியப்பன், த.பெ.சுப்பிரமணியம், கதவு எண்.304/3-7, கொட்டக்காடு, சாணார்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (துனியர்/புரோக்கர்), 3)திரு.S.வெங்கடேசன், த.பெ.சுப்பிரமணியம், கதவு எண்.9/1 SMD ரோடு, கிராஸ்-3, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (பத்திர எழுத்தர்), 4)திரு.M.ராஜகோபால், த.பெ(லேட்) முருகேசன், கதவு எண்.3/5A1, AKE தெரு, எண்-9, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (துனியர்/புரோக்கர்), 5)திரு.S.சுரேந்திரகுமார், த/பெ.சுப்பிரமணியம், கதவு எண்.215, கோம்பை நகர், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (துனியர்/புரோக்கர்) மற்றும் 6)திரு.M.சேகர் @ சந்திரசேகரன், த.பெ.முத்துசாமி, கதவு எண்.2/280-A, வெற்றிநகர், ஆண்டிபாளையம், அனிமூர் அஞ்சல், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (துனியர்/புரோக்கர்) ஆகியோர்கள் மீது இன்று 13.03.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 17.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2020, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

13.03.2020

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.